# இடம் பெயர்ந்த வாழ்வுக்கு 20 வயது ஆகிறது



தென் இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதியும், வெகுஜன செயற்பாட்டாளருமான சரணபால சில்வா அண்மையில் வடபகுதிக்கு சென்றிருந்தார். அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள். நாங்கள் 11.06.2010 ல் யாழ்ப்பாணம் சென்றிருந்தோம் அங்கே நன்கு நாட்கள் தங்கியிருந்து பல பகுதிகளுக்கும் போயிருந்தோம். எமது தூதுக்குழுவில் தென் இலங்கையின் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த 40பேர் அடங்கியிருந்தனர்.

வலிகாமம் வடக்குப் பகுதிகளான மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் தங்கியிருந்த கடற்தொழிலாளர்களை நாம் சந்தித்து இருந்தோம் இவர்கள் 1990ம் ஆண்டு யூன்மாதம் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வடமராட்சியில் முகாம்களில் வாழ்கின்றனர். கடந்த 20 ஆண்டு காலமாக இவர்கள் முகாம்களில் உள்ளனர் அங்கே நின்ற ஒரு இளம் யுவதியை சுட்டிக்காட்டி ஒரு பெரியவர் இந்த பெண் நாம் இடம் பெயரும் போது 4 மாத குழந்தை இவளுக்கு தற்போது வயது 21 ஆகிறது. 21 வருட காலமும், முகாம் வாழ்க்கையே என கவலையுடன் தெரிவித்தார்.

இங்கே 3500 குடும்பங்கள் இருப்பதாகவும், வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து 4000 குடும்பங்கள் இங்கு வந்துள்ளதாகவும், மொத்தம் 7500 குடும்பங்கள் வடமராட்சியில் உள்ளதாக அங்கு உள்ள செயற்பாட்டாளர் எம்மிடம் தெரிவித்தார்.

தாம் தொழிலை மேற்கொள்ள இராணுவம் அனுமதிப்பதில்லை என்றும், இதனால் தாம் மிகவும் கஸ்டப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எமது குழந்தைகள் தற்போது வாலிபர்கள் ஆகிவிட்டனர், எமது பிரதேசம் எது? எமது வீடுகள் எங்கே உள்ளன என அவர்கள் கேட்கத்தொடங்கியுள்ளனர், அவர்களின் கேள்விகளுக்கு பதில் கொடுக்கமுடியாமல் உள்ளதாக அங்குள்ள மூத்தவர்கள் தெரிவித்தனர்.

தற்போது தமக்கு நவீன மீன்பிடி வசதிகள் எதுவும் இல்லாததால் கட்டுமரத்தில் மீன்பிடிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். எமக்கு நவீன உபகரணங்கள் ஏதும் வழங்கப்பட்டால் அதை விடுதலைப்புலிகளிடம் வழங்கி விடுவார்கள் என்றே கூறப்பட்டது. தற்போது யுத்தம் முடிவடைந்து விட்டது, இன்றும் இதே கதை தொடர்கிறது. மேலும் இயந்திரப்படகுகளை கொள்வனவு செய்து தொழில் செய்வது என்றால் அதற்கு பெரியளவு மூலதனம் செலவாகும். 9 குதிரை வலு இயந்திரத்தை கொள்வனவு செய்ய ரூ 250000 செலவாகும், வலைகளை கொள்வனவு செய்ய 250000 ரூபா படகிற்கு 150000 என கிட்டத்தட்ட 10 லட்சம் தேவைப்படும் இதை யார் தருவார்கள். எம்மிடமோ பணம் இல்லை. எனவே கட்டுமரத்திலே தொழில்செய்கிறோம்எனக் கூறினார்கள்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு 10 தகரங்களும் 5 சீமெந்து பக்கட்டுகளையும் தரும் அரசாங்கம் 10 லட்சம் முதலீடு செய்ய எமக்கு உதவுமா? என அவர்கள் எம்மிடம் கேட்டனர்.

தமது குழந்தைகளின் கல்வி மிக மோசமான நிலையில் இருப்பதாகவும், பாடசாலைக்கு சென்றாலும் அகதி பிள்ளைகள் என புறக்கணிக்கப்படுகின்றனர். வயிற்றுப் பசியை போக்க முடியாமல் இருக்கும் எமக்கு பிள்ளைகளின் கல்விக்கு எப்படி வசதி செய்து கொடுக்க முடியும் என அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

தொடர்ந்தும் இடம்பெயர்ந்து முகாம்களில் இருப்பதால் சொல்ல முடியாத துன்பங்களுக்கு முகம் கொடுப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது சமூகசீரழிவுக்கான நிலைமைகள் அதிகம் காணப்படுவதாகவும், தடுக்க முடியாமல் திண்டாடுவதாகவும் தெரிவிக்கின்றனர். தமது குறைகளை வெளிப்படுத்த முயன்றால் பயங்கரவாத நாம் சூட்டப்படுவதாகவும் அச்சப்படுகின்றனர்.

இராணுவம் சுற்றிவர நிலைகொண்டு இருப்பதால் பெண் பிள்ளைகள் குளிப்பதற்கு கூட அச்சப்படும் நிலை உள்ளதாக தெரிவிக்கின்றனர். பாலியல் பலாத்காரம் துன்புறுத்தல் அதிகமாக காணப்படுவதாகவும் அவர்கள் அச்சத்துடன் தெரிவித்தனர்.

வடபகுதியில் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக மீனவ சமுதாயம் காணப்படுகிறது. அதிக இழப்புகள் இடம்பெயர்ந்த வாழ்வு, எதிர்காலம் நம்பிக்கையற்ற நிலை, சமூகசீரழிப்பு என அல்லலபடும் இம்மக்கள் இப்பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டு இருப்பதால், தம்மால் எதுவும் செய்ய முடியாத நிலை உள்ளதாக குமுறுகின்றனர். வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மீனவ தொழிலாளர்கள் அங்கு மீண்டும் செல்ல முடியாமலும் இங்கே தொழிலும் செய்ய முடியாமலும் திண்டாடுவதாக தெரிவிக்கின்றனர். இந்து சமுத்திரத்தின் முத்து, கடல்சூழ் இலங்கை என்றெல்லாம் புகழப்படும் இந்த நாட்டின் மீன்படி சமூகம் படும் கஸ்டங்களை கண்டு வேதனையுடன் திரும்பினோம்.




# இந்திய திரைப்பட விழாவில் இருந்து செம்மொழி மாநாடு வரை

வன்னியுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதக்கொலைகளை கண்டித்து சர்வதேசமெங்கும் எதிர்ப்பு அலைகள் மேற்கிளம்பியவாறே உள்ளன. இதன் உச்ச கட்டமாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பாங்கி மூன் மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழுவையும் அமைத்துள்ளார் எனவெ இலங்கை அரசாங்கம் சர்வதேசரீதியாக ஒரு சிக்கலுக்கு முகம் கொடுக்கும் நிலையில் உள்ளது.

வன்னி யுத்தத்தை இலங்கை இரசாங்கம் மூர்க்கத்தனமாக நடத்துவதற்கு சகல வழிகளிலும் இந்திய அரசே பிற்புலமாக நின்று செயற்பட்டது ஆள் உதவி ஆயுதஉதவி நிபுணத்துவநிதி உதவி என சகல உதவிகளையும் வாரி இறைத்தது. தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொல்லப்பட்டார். என்ற செய்தியுடனேயே இந்திய பாதுகாப்பு துறை செயலாளர் நாராயணன் இங்கிருந்து இந்தியா சென்றார்.

எனவே இந்திய நலனுக்காக, இந்திய பழி தீர்ப்புகாக முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் பின்னர் இலங்கை அரசை காப்பாற்ற வேண்டிய நிலை இந்தியாவுக்கு உள்ளது . அதற்காக பல கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒரு கட்டமே இந்திய சர்வதேச திரைப்பட விழாவாகும்.

இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசை குளிரவைக்கவம் இலங்கை அரசுக்கும் சர்வதேச ரீதியாக ஒரு இமேஜை வழங்கவும் இந்த இந்திய சர்வதேச திரைப்பட விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்படி திரைப்பட விழாவில் யாரும் கலந்து கொள்ளக்கூடாது என தென் இந்திய அமைப்புக்கள் காத்திரமான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டன. வன்னி யுத்தத்தின் போது இந்திய தேர்தலின் போது இந்த அமைப்புகளின் நடவடிக்கைகள் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தினால் தற்போதைய எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்திய அரசு பெரிதாக கணக்கில் எடுக்கவில்லை ஆனாலும் வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் எதிர்ப்பும் தென் இந்திய அமைப்புக்களின் எதிர்புகளும் ஒன்று சேர இந்திய சர்வதேச திரைப்பட விழா பெரும் தோல்வியை சந்தித்தது. இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் பெரிய அவமானத்தை உலகம் முழுவதும் ஏற்படுத்தி விட்டது. இதன் பின்னர் செம்மொழி மாநாடு மேடை யேற்றப்பட்டது. இலங்கை அரசின் மீது ஏற்பட்டிருக்கும் யுத்த கறையை போக்க கருணாநித எடுத்த முயற்சியே அதிகம் எனலாம். யுத்தம் முடிந்தவுடன் தமிழ் மக்கள் 3 லட்சம் பேர் அகதிகளாகவும், 40,000 மேற்பட்டோர் கொல்லப்பட்ட நிலையிலும். 25000 மேற்பட்டோர் கைதிகளாக்கப்பட்ட நிலையிலும், ஒவ்வொரு தமிழ்நெஞ்சமும் வெந்து, வெதும்பி அழுது வடித்துக்கொண்டிருந்த வேளையில் தனது புதல்வி கனிமொழி தலைமையில் கருணாநிதி ஒரு தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பி இருந்தார். அந்த தூதுக்குழு இலங்கை அரசு சார்பாக அறிக்கை ஒன்றை விடுத்துச்சென்றது, எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

மகிந்த இராஜபக்ச அண்மையில் இந்தியா சென்றிருந்த சமயம் அவரின் வருகையை பகிஸ்கரிக்க பல அமைப்புக்கள் தென் இந்தியாவில் முன் வந்தன. கருணாநிதி மட்டும் ஒரு தூதுக்குழுவை டெல்கி அனுப்பி மகிந்த ராஜபக்சவை கௌரவப்படுத்தினார்.

இன்று உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் எதிராக கிளம்பியிருக்கும் வேளையில் கருணாநிதியின் செம்மொழி மாநாடு நடந்துள்ளது.

மேற்படி மாநாட்டுக்கு யாரும் போகக் கூடாது என இலங்கையில் பல எதிர்ப்புகள் கிழம்பியிருந்தன. ஆனால் இலங்கையில் இருந்து குறிப்பிட்ட முதுகெலும்பில்லாத புல்லுருவிகள் மேற்படி மாநாட்டுக்கு சென்றிருந்தமையே கவலை தரும் விடயமாக உள்ளது. தாம் இலக்கியத்துக்குள் மாத்திரம் உள்ளதாக அடையாளம் காட்டுபவர். இந்த மாநாட்டுக்கு சென்றிருந்தால் அது வேறு விடயம் ஆனால் தம்மை அரசியல் விமர்சர்களாகவும் தமிழ்தேசிய மீட்பர்களாகவும் அடையாளம் காட்டிவிட்டு மாநாட்டுக்கு சென்று கருணாநிதிக்கு ஒரு சான்றிதழை வழங்கியிருப்பது வேதனைக்கு உரியதாகும்.

எமது உடன் பிறப்புகள் குவியலாக கொல்லப்பட்டுள்ள நிலையில் அந்த சோகம் இன்னும் ஆறாத நிலையில் அந்த சோகத்திற்கு காரணமானவர்களை கௌரவப்படுத்தியது எப்படி நியாயமாகும். எமது குடும்பத்தில் ஒருவர் இறந்தால் கூட ஒரு வருடத்துக்கு அந்த சோகத்திற்காக எந்த வைபவத்திலும் கலந்து கொள்ளாத வழமை எம்மிடம் உண்டு. ஆனால் இவ்வளவு பெரிய மனித அவலம் நடந்துள்ள நிலையில், அவற்றை பொரிதுபடுத்தாது செம்மொழி மாநாட்டுக்கு சென்று வந்தமை பச்சை துரோகமாகும்.

மகிந்த ராஜபக்சவை, சோனியா காந்தியின் இந்திய அரசு காப்பாற்ற இந்திய அரசை கருணாநிதி காப்பாற்ற கருணாநிதியை எம்மத்தியில் உள்ள கருங்காலி காப்பாற்றி உள்ளது என்பதே உண்மையாகும்.

தோழராக இருந்து மாமனிதராகலாம் என செயற்பட்டு இறுதியில் துரோகி ஆகியிருப்பது மட்டும் உண்மையாகும்.